TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

8069882

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம் : VELLORE | PS: காவல்நிலையம் VIGILANCE & ANTI-CORRUPTION, VELLORE | Year ஆண்டு: 2020 | FIR No. மு.த.அ. எண்: 5/2020 | Date நாள்: 11.07.2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended in Act 2018. | Sections பிரிவுகள்: 7(a) the Prevention of Corruption Act 1988 as amended in Act 2018.
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் June 2020 | Date to : நாள் வரை 07.07.2020
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் — | Time to : நேரம் வரை —
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.07.2020 | Time : நேரம் 15.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOLUME-I 2020 | Time : நேரம் 15.00 hrs and 16.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக TAMIL COMPUTER TYPED COMPLAINT.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 40 kms - SOUTH WEST DIRECTION
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி OFFICE OF THE JUNIOR ENGINEER, TANGEDCO, VEPPANKUPPAM, VELLORE DIST
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் N. PREMNATH | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் NARASHIMAN.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1993 | (d) Nationality : நாட்டினம் INDIAN | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் COOLIEE | (g) Address : முகவரி No.109, PANCHAYAT BOARD STREET, UNNAI VILLAGE & POST, ANAICUT TALUK, VELLORE DISTRICT.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. JAYA SANKAR, JUNIOR ENGINEER, TANGEDCO, VEPPAMKUPPAM, VELLORE DISTRICT.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

NO - DELAY

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

SEPARATE SHEET ATTACHED

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

N. Premnath 11-7-2020      [signature] 11/07/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 11.7.2020 17.00hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. VIJAY
Rank: நிலை INSPECTOR OF POLICE, V&A.C., VELLORE. No.

பணிந்து அனுப்பபடுகிறது:- வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் 11.07.2020 ந்தேதி மதியம் 15.00 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது புகார்தாரர் திரு. N.பிரேம்நாத், வயது.27/2020, த/பெ. நரசிம்மன், எண்.109, பஞ்சாயத்து போர்டு தெரு, ஊணை கிராமம் மற்றும் அஞ்சல், அணைக்கட்டு தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கணிணியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை கொடுத்தார் அதனை பார்வை செய்ததில் திரு.ஜெயசங்கர், இளநிலை பொறியாளர், தமிழ்நாடு மின்சாரவாரியம் வேப்பங்குப்பம், என்பவர் செய்யவேண்டிய பணிக்காக லஞ்சம் கேட்பதாக கொடுத்த புகாரின்மீது முதற்கட்ட விசாரணை மேற்கொண்டு வழக்கு பதிவு செய்ய தக்க முகாந்திரம் இருந்தமையால் மேற்படி புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. புகார் மனுவின் விவரம் பின்வருமாறு:- அனுப்புனர் N.பிரேம்நாத், வயது.27/2020 த/பெ. நரசிம்மன் எண்.109, பஞ்சாயத்து போர்டு தெரு, ஊணை கிராமம் மற்றும் அஞ்சல் அணைக்கட்டு தாலுக்கா வேலூர் மாவட்டம் பெறுநர் காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை வேலூர். ஐயா, நான் 12-ம் வகுப்பு வரை படித்துள்ளேன் என் அப்பா பெயர் நரசிம்மன், அம்மா பங்கஜாட்சி. என் உடன் பிறந்தவர்கள் அண்ணன் கோபிநாத் அக்கா கோமலா என் உடன் பிறந்தவர்களுக்கு திருமணமாகி தனியாக வசித்து வருகின்றனர். நான் என்னுடைய அப்பா நரசிம்மன் மற்றும் அம்மா பங்கஜாட்சியுடன் ஊணை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது கூலி வேலை செய்து வருகிறேன் என் அப்பா குத்தகைக்கு நிலம் வாங்கி பயிற் செய்கிறார் கறவை மாடுகள் வைத்து தொழில் செய்து வருகிறார். கடந்த நவம்பர் மாதம் 2018 ஆம் ஆண்டு என் அப்பா அவரது பெயரில் அரிமலை கிராமத்தில் சுமார் 4 ஏக்கர் 33 செண்ட் புன்செய் நிலத்தை விலைக்கு வாங்கி அதனை ஒடுகத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தார். மேற்படி அரிமலை கிராமத்தில் உள்ள எங்களுக்கு சொந்தமான நிலத்தில் போர்வெல் போட்டோம், அந்த நிலத்திற்கு மின் இணைப்பு பெற என் அப்பா நரசிம்மன் பெயரில் கடந்த ஜூன் மாதம் 2020 வேப்பங்குப்பம் மின்வாரிய அலுவலகத்திற்கு நானும் என் அப்பாவும் சென்று 5 HP தோட்டக்கலை மின் இணைப்பு பெற மனு எழுதி மணியக்காரர் சர்ட்டிபிகேட் வாங்கி மனுவினை வேப்பங்குப்பம் மின்வாரிய அலுவலகத்தில் இருந்த இளநிலை பொறியாளர் ஜெயசங்கர் என்பவரிடம் கொடுத்தோம் அதற்கு அவர் முதலில் ஆன்லைனில் அப்ளை செய்துவிட்டு அதன் பின்னர் மனுவை

என்னிடம் எடுத்துவந்து கொடு என்று சொன்னார். அதனால் நான் ஒடுகத்தூர் சென்று ஆன்லைனில் விண்ணபித்துவிட்டு மீண்டும் மறுநாள் வேப்பங்குப்பம் மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று இளநிலை பொறியாளர் திரு.ஜெயசங்கர் அவர்களிடம் கொடுத்தேன் அதனை வாங்கி கொண்ட அவர் சரி நீ போ எஸ்டிமேஷன் போடவேண்டும் ஒரு வாரம் கழித்துவா என்று சொன்னார் நானும் மனு கொடுத்த நாளில் இருந்து ஒருவாரம் கழித்து வேப்பங்குப்பம் மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று இளநிலை பொறியாளரை சந்தித்தேன் அப்போது அவர் எதுவும் கவனிக்கமாட்டாயா வெறும் கையோடு வந்தால் எப்படி எனக்கு தனியாக ரூ.10,000/-ம் கொடுக்க வேண்டும் நீ போய் ரூ.10,000/-தை ரெடி செய் நான் உங்கள் நிலத்தை வந்து பார்க்கிறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டார் அதன் பின்னர் கடந்த 16.06.2020 அன்று நான் என்னுடைய நிலத்தில் மாங்காய் அறுத்துக்கொண்டு இருக்கும்போது திரு.ஜெயசங்கர் இளநிலை பொறியாளர் வந்து நிலத்தை பார்த்து எத்தனை மின் கம்பம் தேவை என்பது சம்மந்தமாக அளந்துவிட்டு நீ வெறும்வாயில் பேசிக்கொண்டிருந்தால் எப்படி ரூ.10,000/- கொடுத்தால் எஸ்டிமேஷன் போட்டு வேலை ஆரம்பிக்கலாம் என்று சொல்லி அங்கிருந்து சென்றுவிட்டார் அதன் பின்னர் 24.06.2020 அன்று திரு.ஜெயசங்கர் இளநிலை பொறியாளரை அவரது அலுவலகத்தில் நேரில் சென்று சந்தித்தேன் அதற்கு அவர் ரூ.32,170/- எஸ்டிமேஷன் பணம் கட்டவேண்டியுள்ளது நீ முதலில் அந்த பணத்தை கட்டிவிட்டு, வரும்போது ரூ.10,000/-த்தை தனியாக எனக்கு கொண்டு வா என்று சொன்னார், அதற்கு நான் சார் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை கவர்மென்ட் பீஸ் கட்டிவிடுகிறேன் நீங்கள் உங்களுக்கு தனியாக கேட்கும் பணத்தை கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் என்றேன் அதற்கு அவர் முதலில் எஸ்டிமேஷன் அமௌண்டை கட்டிவிட்டு என்னை வந்து பார் என்று சொன்னார். அதன் பின்னர் கடந்த 01.07.2020 அன்று ஒடுகத்தூர் சென்று ஆன்லைனில் ரூ.32,170/-தை மின்சாரவாரியத்திற்கு பணத்தை கட்டிவிட்டு பணம் செலுத்திய ரசீதை எடுத்துக்கொண்டு வேப்பங்குப்பம் சென்று திரு.ஜெயசங்கர் அவர்களை சந்தித்து அந்த ரசீதை கொடுத்தேன் அதனை வாங்கி என்னுடைய அப்ளிகேஷனில் அதனை பின்செய்து வைத்துக்கொண்டு எங்க நான் கேட்ட ரூ.10,000/-ம் என்று கேட்டார் அதற்கு நான் சார் என்னிடம் பணம் இல்லை என்று சொன்னேன் அதற்கு அவர் உன்னுடைய விருப்பம் நீ பணம் கொடுக்காமல் உன் வேலை நடக்காது எப்போது கேட்டாலும் பணம் இல்லை என்று சொல்கிறாய் வேலை நடக்கனும் கனெக்ஷன் கிடைக்க வேண்டும் என்றால் பணத்துடன் என்னை வந்து பார்

என்று சொல்லி அனுப்பிவிட்டார். அதன் பின்னர் மீண்டும் 07.07.2020 அன்று காலை வேப்பங்குப்பம் மின்வாரிய அலுவலகத்திற்கு சென்று இளநிலை பொறியாளர் அவர்களை சந்தித்து மீண்டும் கெஞ்சி கேட்டதால் அவர் நீ ரு.5,000/-தை வைத்துக்கொண்டு மின்கம்பம் நடுவதற்கு வந்து வேலை செய்பவர்களுக்கு செலவு செய் எனக்கு தனியாக ரு.5,000/-ம் கொடுக்க வேண்டும் ரு.5,000/-தை எடுத்துக்கொண்டு எப்போது வேண்டுமானாலும் என் அலுவலகத்திற்கு வந்து என்னைப்பார் நான் செல்லும்விதம் அந்த பணத்தை கொடு என்று முடிவாக கண்டிப்புடன் சொல்லிவிட்டார். திரு.ஜெயசங்கர், இளநிலை பொறியாளர் அவர்களுக்கு பணம் ரு.5,000/-ம் லஞ்சமாக கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, லஞ்ச பணம் கேட்ட வேப்பங்குப்பம் மின்சார வாரியத்தில் பணிபுரியும் இளநிலை பொறியாளர் திரு.ஜெயசங்கர் அவர்கள் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxx (N.Premnath 11-7-2020)

Sir, Received the complaint on 11-07-2020 at 15.00 hrs after conducting preliminary enquiry and approval of the superior officers on 11.07.2020 at 16.30 hrs registered a case in Vellore V&A.C. Det., Crime No.05/2020 U/s. 7(a) of the PC Act 1988 as Amended in Act 2018. The FIR in original along with the complaint sent to the Hon'ble CJM and Special Judge, Vellore and sent the copies to officers concerned. (Sd/-XXXX) 11/07/2020 (S.VIJAY) INS/V&AC/VLR.

11/07/2020
(S.VIJAY)
INSPECTOR
V & A.C., VELLORE.